<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CRMP.No. 953/2025 PW– 1

| | |
|---|---|
| Name | : சூராண்டி ( மனுதாரர்) |
| Father's/Husband's Name | : அழகன் |
| Village | : இடையபட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of September 2025

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை)**

1. நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இடையபட்டி கிராம சர்வே எண்.67/4ல் 61 செண்ட் நிலம் என் தந்தைக்கு பாத்தியமானது. அவர் இறப்பிற்கு பிறகு மேற்படி சொத்தை நானும், எனது தாயார் மற்றும் சகோதரர்கள் மொத்தம் 4 பேர் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். எங்களது சொத்தை அனுபவம் செய்யவிடாமல் எங்கள் ஊரைச்சேர்ந்த திருமலை என்பவரது மகன் சின்னச்சாமி என்பவரும், அவரது மனைவியான லெட்சுமி என்பவரும் சேர்ந்து தடுத்து வருகிறார்கள். கடந்த 30.04.2025ம் தேதி எதிரிகள் மரத்தை வெட்டி சாய்த்துவிட்டார்கள். அதை கேட்க சென்றபோது எதிரிகள், என்னையும், என் அண்ணன் மனைவி பெரியழகி என்பவரையும் ஓட, ஓட அடித்து விரட்டினார்கள். 04.05.2025ம் தேதி வெட்டிய விறகுகளை எதிரிகள் ஏற்றிக்கொண்டு சென்று விற்றுவிட்டார்கள். அதே மாதம் 22.05.2025ம் தேதி

எதிரிகள் சின்னச்சாமி மற்றும் லெட்சுமி எங்கள் நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து உழவடை செய்தார்கள்.

2) 1986 முதல் சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கு எனது தாயார் பொதியம்மாள் கிஸ்தி வரி செலுத்தி வருகிறார். அதற்கான ஆவணங்கள் உள்ளது. நானும் எனது சகோதரர் அழகப்பன் ஆகியோரும் கிஸ்தி செலுத்தியுள்ளோம். சின்னச்சாமியின் தந்தை எனக்கு பெரியப்பா ஆவார். குடும்ப சொத்துக்களை ஏற்கனவே பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டதால் சின்னச்சாமியின் தந்தை திருமலைக்கு எங்கள் நிலத்திற்கு அருகே பட்டா இடம் உள்ளது. தற்போது எதிரிகள் பாகம் பிரித்துக்கொண்டுள்ள போதிலும், அவசியமின்றி எங்கள் நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து எங்களை எங்கள் நிலத்திற்குள் செல்லவிடாமல் தடுத்துவருகிறார்கள். நாங்கள் பயிரிட்ட சோளத்தை எதிரிகள் பிடுங்கி எறிந்துவிட்டார்கள். தற்போது நிலம் தரிசாக உள்ளது. எனவே, எனது புகாரை ஏற்றுக்கொண்டு எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.01 14:27:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்